# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2018

| தரம் - 7 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

## பகுதி – I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. முதல் வணக்கத்திற்குரிய கடவுளாக
1) பிள்ளையார் 2) சிவபெருமான் 3) விஷ்ணு 4) முருகன்

02. மகர சங்கிராந்தி என்று அழைக்கப்படும் பண்டிகை
1) புதுவருடப்பிறப்பு 2) தீபாவளி 3) தைப்பொங்கல் 4) ஆடிப்பிறப்பு

03. எட்டாந் திருமுறையாக அமைந்தது
1) திருவிசைப்பா 2) திருப்பல்லாண்டு 3) திருவாசகம் 4) திருமந்திரம்

04. அம்பிகை தாட்சாயணியாக தாமரை மலரில் தோன்றிய நாள்
1) மாசிமகம் 2) தைப்பூசம் 3) ஆனி உத்தரம் 4) பங்குனி உத்தரம்

05. திருமுறைகளைத் தொகுத்தவர்
1) இராஜராஜசோழன் 2) நம்பியாண்டார் நம்பி
3) சேக்கிழார் 4) அபிநயன்

06. காரைக்காலம்மையார் இறைவனின் திருநடனத்தைக் கண்டு தரிசித்த தலம்
1) சிதம்பரம் 2) திருவாலங்காடு 3) திருவையாறு 4) திருவாரூர்

07. ஈழத்தை சிவபூமி எனக் குறிப்பிட்டவர்
1) திருஞானசம்பந்தர் 2) திருமூலர் 3) குலோத்துங்கன் 4) திருநாவுக்கரசர்

08. பிராமணர்கள் வேதமோதுவதற்கென அமைக்கப்பட்ட இடம்
1) சிவிகசாலை 2) சொத்திசாலை 3) கோயிற்கடவை 4) குமரகோட்டம்

09. தட்சணாயின காலம் தொடங்கும் மாதம்
1) ஆடி 2) சித்திரை 3) தை 4) ஆவணி

10. திருஞானசம்பந்தரால் போற்றிப் பாடப்பட்ட ஈழத்துத் திருத்தலம்
1) திருக்கோணேஸ்வரம் 2) முன்னேஸ்வரம்
3) நகுலேஸ்வரம் 4) தான்தோன்றீஸ்வரம்



kalvi.lk

11. சார்ந்ததன் வண்ணமாக உள்ள பொருள்

1) பதி 2) பசு 3) பாசம் 4) ஆணவம்

12. உலக கிருஷ்டியின் ஆரம்பநாளாக அமைவது

1) மாசிமகம் 2) தைப்பூசம் 3) சித்திரைப்பரணி 4) ஆனி உத்தரம்

13. யாழ்முரிப்பண் என்று அழைக்கப்படும் பதிகம்

1) "மாதர்ப்பிறைக் கண்ணி...." 2) "மாதர்மடப்பிடியும்....."

3) "மட்டிட்டபுன்னை......" 4) "கல்லூர்ப்பெருமாள்...."

14. சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசைத்தினம்

1) சித்திரைச்சதயம் 2) வைகாசிமூலம் 3) ஆடிச்சுவாதி 4) ஆனிமகம்

15. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலவிருட்சம்

1) மாமரம் 2) இலுப்பை 3) வன்னிமரம் 4) வில்வமரம்

16. இடபக்கொடியை உடையவர்

1) சிவபெருமான் 2) முருகன் 3) பிள்ளையார் 4) விஷ்ணு

17. சுபநேரத்தை அறிந்து கொள்ள பயன்படும் நூல்

1) சிவாகமம் 2) பஞ்சாங்கம் 3) வேதம் 4) உபநிடதம்

18. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய ஈழத்துத் திருத்தலம்

1) கதிர்காமம் 2) செல்வச்சந்நிதி 3) சுவாமிமலை 4) திருவேரகம்

19. திருஞானசம்பந்தர் முத்தியடைந்த வயது

1) 32 2) 16 3) 18 4) 81

20. சைவசமயி ஒருவர் கடைப்பிடிக்க வேண்டியது

1) உண்மை பேசுதல் 2) விரதம் அனுட்டித்தல்

3) அன்புகாட்டல் 4) மேற்கூறிய யாவும்

(20x2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி I

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக. பாடியவர் பெயர் தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

1) "நிரைகழலரவம்......"

2) "நத்தார் படை......"

3) "முத்திநெறி அறியாத........."

4) "குழலொலி யாழொலி........."

5) "வேதநெறி தழைத்தோங்க......."

(5+ ½ + ½ x2=12 புள்ளிகள்)

02. ஆலயம் தொழுவது சாலவும் நன்று

1) ஆலயம் என்பதன் பொருள் யாது?

2) பஞ்சாங்க நமஸ்காரம் என்பது யாது?

3) ஆலயத்தில் நீர் செய்யக்கூடிய தொண்டுகள் 5 எழுதுக.

4) ஆலய வழிபாட்டினால் கிடைக்கும் பயன்கள் 4 எழுதுக.

(2+3+3+4 =12 புள்ளிகள்)

03. சமயகுரவர் வாழ்க்கை நெறிகளை நாமும் பின்பற்றுவோம்

1) மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் சிறப்பு யாது?

2) சுந்தரர் ஆற்றிய சைவசமய பணிகள் 3 எழுதுக.

3) திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து நிகழ்த்திய அற்புதங்கள் எவை?

4) திருநாவுக்கரசர் திருக்கைலைக் காட்சியை தரிசித்த இடம் எது? அதன் போது பாடிய தேவாரம் யாது?

(2+3+3+4 =12 புள்ளிகள்)

04. "பதியினைப் போற் பசு பாசம் அனாதி.........."

1) மூவகைத் திருமேனிகளும் எவை?

2) பசுவின் இயல்புகள் மூன்று எழுதுக.

3) ஆன்மா முத்தியடைவதற்கு யாது செய்தல் வேண்டும்.

4) இறைவனின் எண்குணங்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

(2+3+3+4 =12 புள்ளிகள்)



kalvi.lk

05. “ஆலயம் தானும் அரனெனத் தொழுமே”

1) சித்தாண்டி முருகன் என்ற பெயர் ஏற்படக் காரணம் யாது?
2) ஆரம்பத்தில் ஸ்ரீ சக்கரம் வைத்து வழிபடப்பட்டதலம் எது? இவ்வாலய தீர்த்தத்தின் பெயர் யாது?
3) பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள விக்கிரகங்கள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன? அவை யாவை
4) நகுலேச்சரம் என்ற பெயர்வரக் காரணம் யாது? அதன் சிறப்புகள் 3 தருக?

(2+3+3+4 =12 புள்ளிகள்)

06. “ஆகமம் சாராத வழிபாடு நாட்டார் வழிபாடு ஆகும்”

1) நாட்டார் பெண் தெய்வங்கள் நான்கு எழுதுக.
2) நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகள் 3 எழுதுக.
3) காளி வழிபாட்டினால் கிடைக்கும் நன்மைகள் யாவை?
4) முனியப்பர் வழிபாடு சிறப்பாக நடைபெறும் இடங்கள் யாவை? சிறப்புகள் 2 தருக.

(2+3+3+4 =12 புள்ளிகள்)

07. மனித வாழ்வை மேம்பாடடையச் செய்வன நற்பண்புகள் ஆகும்

1) வாழ்வியல் நற்பண்புகள் 4 எழுதுக.
2) மாலும் அயனும் காணாத நீதியே என்ற குறிப்பிட்டவர் யார்? நீதி வழுவாமல் வாழ்ந்த மன்னன் யார்?
3) பஞ்சமா பாதகங்கள் எவை?
4) நன்றி மறவாமையுடன் தொடர்புடைய குறட்பா ஒன்று எழுதுக.

(2+3+3+4 =12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page